# ஏக்கம்

அவர்கள் வீட்டுப்பெண், கைக்குழந்தையுடன் எங்களகத்திற்கு வந்தாள். குழந்தையைப் பார்த்தேன். கொழுகொழுவென்று உருண்டு திரண்ட உடம்பு; டொமொடோ மாதிரி கன்னங்கள். அப்புறம், அந்தப் பார்வை - கடவுளின் பார்வை இப்படித்தான் இருக்கும்போலும் - பதிந்தும் பதியாமல், அறிந்தும் அறியாமல், பார்த்தும் பாராமல், ஒரு பார்வை. அந்தக் கண்களிலே. பார்த்தவுடனே அதை எடுத்துத் தோளில் சாய்த்துக்கொண்டேன். மாதங்களின் எண்ணிக்கையில் இருந்தது அதன் வயசு. பத்திரமாக அதைத் தாங்கியவாறே அதன் தாயுடன் பேசலானேன். முரளி - முரளீதரன் - என் மடியிலும் இன்பமாகச் சாய்ந்திருந்தான். திடீரென்று நினைவு வந்தது. "அவரிடம் காட்டிவிட்டு வரப்போகிறேன் முரளிக் குஞ்சை!" என்று கூறிவிட்டு குழந்தையை எடுத்துக்கொண்டு எழுந்தேன். சிரித்தாள் அவள். பெருமை பொங்க. "இந்த பிளானலை அடியில் போட்டுக்கொண்டு போங்கோ!" என்று துணியைத் தந்தாள். நானும் கிளம்பினேன் அடுத்த அறையை நோக்கி.

நான் குழந்தையைத் தன்னிடம் கொணருவதைப் பார்த்துக் கொண்டே லேசாக புன்னகை புரிந்தவாறே அசையாமல், வசியப்படாமல், உட்கார்ந்திருந்தார் அவர். கொண்டா!" என்று கை நீட்டி வாங்கிக்கொண்டால் என்னவாம்? அவரிடம் குழந்தையை எடுத்துப்போய் மகிழ்ச்சியை அவருடன் பகிர்ந்துகொள்ளத்தானே வருகிறேன்?

"இதோ பாருங்களேன்! என்ன அழகாயிருக்கு, பாருங்களேன்! பார்க்கிற பார்வையைப் பாருங்களேன்!" என்று சொன்னேன். அவர் முகத்தையும் ஏறிட்டுப்பார்த்தேன். அவர் முகத்தில் புன்னகை இருந்தது முன்போலவே. ஆனால் என் பேச்சைக் கேட்டு, பேசிய விதத்தைப் பார்த்து, அவர் ரசித்ததாகத் தோன்றினரேயன்றி, குழந்தையின் முகத்தை ரசிப்பதாகவே அவர் தோன்றவில்லை.

"கொஞ்சம் பாருங்களேன், தொட்டு! எப்படியிருக்கு கஷ்கு முஷ்குன்னு!"

"உம், தொட்டேன். அப்பளா உருண்டை மாதிரியிருக்கு!"

"போங்கோன்னா! அப்பளம்தான் பிடிக்கும் உங்களுக்கு! குழந்தையைக் கண்டால் சட்டுன்னு எடுக்கத் தோணாது! அப்பளா மாவு மாதிரி இது ஒண்ணும் விளக்கெண்ணய் கலந்து இல்லை! சர்க்கரை கலந்திருக்கு!... தெரியுமா? கல்லுக் கண்டு தூளு கலந்து இருக்கு... இல்லேடா கண்ணூ... நீ சர்க்கரைக் குட்டி! சீனிக்கட்டி!"

அவருக்குச் சிரிப்பு வந்தது போலும் என்னைப் பார்த்து! சிரிக்கட்டுமே! குழந்தையை எடுத்துக்கொண்டால் பின்னே மசமசவென்றுதான் இருப்பார்களோ? அதை எடுத்துக்கொண்டு பார்த்தாலல்லவா தெரியும் கற்பனை எப்படி ஊறும் என்று!

அவர் சிரிப்புக்காக நான் இளக்காரப்படவில்லை என்பதைக் காட்ட வேண்டாமா? அதற்காக அவரண்டை குழந்தையுடன் போய், உரிமையுடன் அவருடைய ஒரு தோள் மீது குழந்தையை உட்கார்த்தினேன்.

"பிடிச்சிண்டிருக்கேண்டா கண்ணூ!" என்று கூறி குழந்தைக்குத் தைரியமூட்டினேன்.

"ஐயோ, வேண்டாம்!... கிசு கிசு மூட்டறமாதிரியிருக்கு!" என்று கூவினார் அவர்.

"உடல் சிலிர்க்கிறதுன்னு சொல்லுங்கோ!" என்று கூறிக்கொண்டே அதனுடைய இரண்டு கால்களையும் அவர் கழுத்தைச் சுற்றிப் போட்டு, அதை அவர் கழுத்துப் பிடரியில் உட்கார்த்தினேன். அதன் கைகளை, சொப்புக் கைகளை, அவர் கிராப்புத் தலைமேலே அடுக்கி வைத்து நானும் பின்புறமாக நின்று குழந்தையைத் தாங்கினேன்.

"ஐயோ, கிராப்பு கலையறது! கிசுமுசு மூட்டறது!" என்று கூசித் தோள்களை உதறினார் அவர்.

குழந்தை முகஞ் சுளித்து அழத்தொடங்கிவிட்டது. அழாதா, பின்னே? இப்படி அவர் அதை நடத்தினால் அதற்கு அழுகை வராமலா போகும்? அவர் மேலே எனக்குக் கோபங் கோபமாக வந்தது.

"பாவம், இதைப் போய் உங்களண்டை கொண்டு வந்தேனே!..... அழறது. கண்ணு!" என்று எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன். ஆனால் அவ்வறையை விட்டு வெளியேறும் பொழுது மட்டும்

அவரைத் திரும்பிப் பார்க்காமல் போக இயலவில்லை எனக்கு. திரும்பிப் பார்த்துவிட்டு நின்றேன். குழந்தைகளைக் கோபித்தால் எப்படி மறுகணமே மனம் பதமாகிவிடுகிறது? அது போலவே இந்தக் கோபமும் மாறியது. சற்று நிதானமுடன், நான் "இதுக்கு என்ன பேர், தெரியாதே?' என்று கேட்டேன். அப்பொழுதாவது "என்ன பெயர்?" என்று கேட்கத் தோணிற்றோ அவருக்கு? இல்லை. நானேதான் சொன்னேன்.

'முரளீதரன்! முரளி! தெரியுமா? பார்த்ததும் என்ன பேருன்னாவது கேட்கமாட்டேளோ? நல்ல மாமாடா அது!' என்று குழந்தையிடன் சொல்கிறாப்போல அவரிடம் சொல்லிவிட்டு வந்தேன். அவர்கூட அப்பொழுது மெல்லச் சிரித்தார் போலும். சிரிக்கட்டுமே! நான் இளம் மனைவியாயிற்றே! அதற்காகச் சிரிப்பு வருகிறது! குழந்தையைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரிக்கத் தெரியவில்லையே.

குழந்தையுடன் மீண்டேன் அவளிடம். 'என்ன இருந்தாலும் புருஷாளுக்குக் குழந்தைகளை எடுக்கவோ கொஞ்சவோ தெரியறதில்லைம்மா!' என்றேன் குழந்தையுடன் அமர்ந்தவாறே.

'ஆமாம் - ஆனால் சிலபேர் - அது மாதிரி ரொம்ப அபூர்வம்தான் - பெண்களுக்கு மேலே பணிக்கா குழந்தைகளை எடுப்பா!' என்றாள் அவள்.

'ஆமாம் சூழ்நிலையைப் பொறுத்து சில பேர் அதுமாதிரியும் பழகிவிடறா. இவர் என்னமோ குழந்தைகள் கிட்ட ரொம்ப அண்டமாட்டார்.... இப்பல்லாம் நான் என்ன பண்ணுகிறேன் தெரியுமா? எந்தக் குழந்தைன்னாலும் - நான் எடுப்பேன், விளையாடுவேன் - அவரண்டை கொண்டுபோய் கொஞ்ச நாழி விளையாட்டுக் காட்டிவிட்டு வருகிறது என்று ஏற்படுத்திக்கொண்டிக்கிறேன் வழக்கம் ...... ஏதாவது வஸ்துவைக் காட்டிக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்வாளே, அது மாதிரி."

அவள் சிரித்துக்கொண்டேயிருந்தாள்; நானும் சிரித்துக்கொண்டே அவளிடம் சொல்லிக்கொண்டேன் என் குறையை. ஆம், எனக்கு இருந்த குறையைச் சொன்னேன். கணவரின் அக்காள், தன் தம்பியைப் பற்றி குறைப்பட்டாள். அவரைச் சொன்னதால், அவருடைய பெண்டாட்டியான எனக்கு மனத்திலே உறுத்தல் ஏற்பட்டது. நாத்தனார் சொன்னதிலும் உண்மை இல்லாமற் போகவில்லை. மூன்று குழந்தைகளுடன் வந்திருந்தாள் நாத்தனார். ஒரு மாதம் இருந்தாள். அவர் அந்தக் குழந்தைகளை, ஒரு தரமில்லாவிட்டால் ஒருதரமாவது கொஞ்சியோ, பாராட்டியோ மகிழ்ந்தால்தானே அந்தக் தாயுள்ளம் திருப்திபடும்! நான் அவர் பங்கையெல்லாம் சேர்த்து அந்த மக்களைப் பாராட்டிச் சீராட்டினாலுங்கூட நாத்தனாருக்கு திருப்தியில்லை. தம்பி விஷயத்திலே குறைதான். இதை நன்றாக நான் அறிந்தேன். அதனால் கொஞ்ச நாளாக இந்த வழக்கம் எனக்கு நானே மேற்கொண்டது.

என் மருமாள் சித்ரா. மருமான்கள் இரண்டுபேர் ஜக்கு, சீனு. இம்மூவரும் இருந்தபொழுதெல்லாம் அவர்களுடைய சிறு செயல்களில் உள்ள நுணுக்கத்தையும், அறிவையும் அவரிடம் எடுத்துக் கூறிக் கொண்டு நாத்தனாருக்கு திருப்தியளிக்க முயன்று வந்த நான், அவர்கள் ஊருக்குப் போய்விட்ட பின்பும் யார் எந்தக் குழந்தையுடன் வந்தாலும், அந்தக் குழந்தையை அவரிடம் எடுத்துச் செல்வதென்று ஏற்படுத்திக்கொண்டேன். அந்தக் குழந்தையென்னும் சிறு உருவத்திலும் அவருக்குப் பெருமதிப்பு ஏற்படணுமென்று முயன்று வந்தேன்.

இதைத்தான் சொன்னேன் அவளிடம். அவள் சிரித்துவிட்டு, "தங்களுக்கு என்று பிறந்துவிட்டால் தன்னாலே குழந்தைகள் அருமை தெரிஞ்சுடறது!" என்றாள்.

நான்கூடச் சிரித்தேன், சட்டென்று பதில் ஏதாவது சொல்லலாமென்றாலும் தெரியவில்லை.

எனினும், "அப்படியும் குழந்தைகள் அருமை தெரியாதவர்கள் இல்லையா என்ன? ஆகக்கூடி இவருக்குக் குழந்தைகள் விஷயத்திலே ஒண்ணுமே தெரியறதில்லை; எப்படியும் அவருக்குத் தெரியப் பண்ணுகிறதுன்னு சங்கல்பம் எனக்கு! குழந்தைகளைப் பார்த்து ரசிக்காத மனசு அதென்ன உசத்தி மனஸா என்ன? நாஸ்திக மனசு இல்லையோ? கடவுளும் குழந்தையும் . . . "

"ஏதேது . . . உங்களுக்கு ரொம்ப ஆசையிருக்கே!" என்று கூறி கலகலவென நகைத்தாள் அவள்.

நான் நாணவில்லை; ஏனெனில் குழந்தைகள் என்றால் வெறுக்கும் மனம் எனக்கு இல்லை, எனக்கு வேணும் குழந்தைகள் என்று நான் விரும்பவில்லையெனினும், பிற குழந்தைகளைச் சளைக்காமல் அலுக்காமல் பேணுவேன். எனக்கு அவளிடம் இதை விவரித்துக்கூற இஷ்டம் எனினும் அப்படிக் கூறவும் துணிவு இல்லை. நான் ஒரு இளம் மனைவியாக - புது மனைவியாக இருந்தேன் அந்நாட்களில்!

இந்நாள்தான் மாறிவிட்டது. நான் இருக்கும் நிலைமை வேறு, என் மனநிலைவேறு, பிறர் என்னை நோக்கும் மனநிலையும் வேறு, நாங்கள் இருவர் உள்ள எங்கள் சிறுகுடும்பம் தான் மாறவில்லை.

எண்ணம் தீவிரமாகுமானால், உறுதி ஏற்படும் அல்லது ஏக்கம் உண்டாகும். எனக்கு ஏக்கமா பிறக்கணும்!

அவளே வந்திருந்தாள் இன்று. கையிலே ஒரு குழந்தை, பக்கத்திலே ஒரு நான்கு வயதுப் பிள்ளை - அன்று மகவாக இருந்தவன் இன்று அவன் தன் தங்கைப் பாப்பாவுடன் எங்கள் வீடு வந்திருக்கிறான்.

"என்னப்பா, தங்கைப்பாப்பாவை நேக்குத் தரயா" என்று கேட்டவாறே அவனைத் தொட்டேன். நாணிக் கோணிக்கொண்டு பிணங்கினான் அவன். அவனுடைய அன்னை ஏந்தியிருந்த குழவியைப் பார்த்தேன். மழமழவென்று மெருகுடன் விளங்கியது அம்மகவு. கண்களிலே - கடவுளுக்கு உள்ள பார்வையேதான் - என்னைப்பார்த்தும் பாராததுபோல அப்பால் திருப்பிவிட்டதே விழிகளை? தாயினிடம்தான் எப்போதும் இருக்கிறதே, என்னிடம் சற்று வரக் கூடாதா? கை சாய்க்கக்கூடாதா? கடவுளின் பார்வையைப்போலவே இதன் பார்வையும் என்மேல் விழுந்தும் பதியவில்லை.

எனக்குக் குழந்தையை எடுக்க ஆவல். ஆனால் சற்று தயக்கமாயும் இருந்தது. கொஞ்சநேரங் கழித்து ஆவல் பிடிபடவில்லை. அவள் ஒன்றும் நினைக்கமாட்டாள் என்னும் துணிவுகொண்டு அதை எடுத்து அணைத்துக்கொண்டேன். அதே சமயம், அவர் கதவருகு நின்று குழந்தையுடன் நான் நிற்கும் தோற்றத்தைக் கண்டு ரசிப்பவர்போலக் காட்சியளித்தார்.

உடனே போனேன் அவரண்டை, 'இதைப் பாருங்களேன், என்ன போக்கிரி தெரியுமா? எடுத்துக்கறேளா?' என்று கேட்டேன் அவர் அதற்குள் கைநீட்டினார் அவரிடம் கொடுத்தேன் அவர் அதை உச்சி முகர்ந்துவிட்டு, கனிவோடு அதன் முகத்தைப் பார்த்தார். "வாய் அழகாயிருக்கு, இல்லை?" என்று கேட்டார். குழந்தைகளின் பொக்கைவாய்ச் சிரிப்புத்தான் உலகமறிந்த சிறப்பு வாய்ந்ததாச்சே! இவர் என்ன புதுசாகச் சொல்லுகிறாரே என்று நினைத்தேன். ஆனால், அவர் வாயினின்று இந்த வார்த்தை வந்ததன் காரணம் நான் அறியாதவளா?

"இதுக்கு பிஸ்கெட் கொடு!" என்றார் அவர்.

'இதுக்கு வாய் பிஸ்கட் வாயே ஒழிய, இது பிஸ்கட் தின்கிற வாய் இல்லை! இது தின்குமா? அதோ அந்தக் பயலுக்குத்தரேன்! என்று கூறிவிட்டு, குழந்தையை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டேன்.

'பேர் என்னவாம்?' என என்னைப் பார்த்து வினவினார் அவர். நான் அவளைப் பார்த்தேன்.

"ராதை" என்று தெரிவித்தாள் அவள்.

"பேருக்குத் தகுந்த மாதிரி அழகாக இருக்கு!" என்று கூறினார்.

நான் என் இந்த நாள் எண்ணப் போக்கிலே - இப்பொழுது அடிக்கடி சிந்திக்கும் தோரணையிலே - யோசித்துக்கொண்டிருந்தேன். அதுதான் 'இவருக்கே பாவம் ஆசை வந்துவிட்டது இப்பல்லாம்,' என்றுதான்.

அவர் போய்விட்டார் அப்பால். நான் சற்று குன்றிப்போன மனமுடன், அவளண்டை மீண்டேன். குழந்தையுடன் அவளண்டை குனிந்தேன். அதைத் தாங்கிக் கொண்டாள் அவள்.

"அவருக்குப் பாவம், குழந்தைகள்னா ரொம்ப ஆசைபோலிருக்கு!" என்றாள் அவள்.

"இல்லை, ஆமாம்" - என்று தடுமாறினேன் நான். "சிலபேர் புருஷாளுக்கே குழந்தைகள்னா ஆசை. அதுவும் - " அவள் மேலே என்ன சொல்ல எண்ணினாளோ? அவள் என்ன சொல்லிவிடுவாளோ என்ற கிலியில் நான் அந்தப் பேச்சை இடைமறித்தேன்.

"முந்தியெல்லாம் அவருக்குக் குழந்தைகள்னாலே அருமை தெரியாது - ஒரு தடவை நீங்கள் வந்தபொழுதுகூட - சொன்னேனே? . . . "

"நினைவில்லையே?" என்பதுபோலப் பார்த்தாள் அவள்.

"முந்தியெல்லாம், அவ்வளவாகக் குழந்தைகளை எடுக்க செய்யமாட்டார். இப்பத்தான். . . " என்றேன்; அதற்குள் என் குரல் இழுபட்டுப் போயிற்று.

"ஆமாம். மனசு எப்பவும் ஒரே மாதிரியாக இருக்கா?" எனப் பொதுவாக ஏதோ சொல்லணுமென்பதற்காகச் சொல்லி வைத்தாள் அவள்.

"ஆமாம்" என்று ஒரு தடவை சொன்னேன். என் மனமோ, 'ஆமாம்', 'ஆமாம்', என்று சொல்லிக்கொண்டேயிருந்தது.

இப்பொழுதெல்லாம் - ஆம், அப்பொழுது மாதிரி இல்லை நான் - ஏன், எவருமே இல்லை இப்பொழுதெல்லாம். நான் கொஞ்சம் பேசுகிறேன். நிறைய நினைக்கிறேன். முன்பு நான், மனைவி ஸ்தானத்திலே பெருமிதங் கண்டிருந்தவள் - இல்லை - அவர், கணவர் ஸ்தானத்திலேயே பேருவகைப் பெருமைகொண்டிருந்தவர் - இப்பொழுது, தந்தையின் ஸ்தானத்திலே இருக்க இஷ்டப்படுகிறார்; நான் தாயின் ஸ்தானம் அடைய ஏங்குகிறவள். உலகமும் மாறிவிட்டது. எங்களைப் பற்றி உலகம் நினைப்பதே வேறு தினுசாக இருக்கிறது.

ஆம், எல்லாம் தெரிகிறது எனக்கு. நான் எதைப்பற்றியும் நிறைய யோசிப்பதால், எந்த விஷயமும் அப்படிப் பதிகிறது; உறுத்துகிறது. அவள் எதையுமே சகஜமாக நினைத்தாள், அலக்காகப் பார்க்கிறாள் - பொதுவாகப் பேசுகிறாள். தன் பேச்சிலோ நினைப்பிலோ அழுத்தம் இருப்பதாக அவளுக்கு எண்ணம் இல்லை. அவன் மனம் குழந்தைபோல இருந்தது. கனமற்றும் சிறப்புற்று இருந்தது. எனக்கோ, எந்த விஷயமும் பிரும்மாண்டமாகத் தோன்றுகிறது. குழந்தையை எடுத்தால், 'இவள் எடுக்கிறாளே!' என அருவருப்படைவார்களோ என்றஞ்சுகிறேன். குழந்தையை எடுக்காமலிருந்தால், 'இப்படிப்பட்டவளுக்கு ஏன் பிறக்கும்!' என்று நினைப்பார்களோ என்று வெருவுகிறேன்.

பலவாறு பயப்படுகிறேன், யோசனைகளிலே முங்கி முங்கி எழுந்து பலவிதமும் பார்க்கிறேன்.

இதோ இந்த விஷயமும் உணராமல் இல்லை. நான் குழந்தையருமை உணர்த்துவேன் அவருக்கு என்று முன்பு நான் சங்கற்பித்தது நிறைவேறியிருப்பதைக் காண்கிறேன் எனக்கு உதவியளிக்க கடவுளும் சித்தம் வைத்துவிட்டார் - தெரிகிறது. நான் ஆறுதல் அடையலாம்; அடையவேண்டும்.

ஆனால் ஆறுதல் எப்படி இருக்கும்? ஒரு உண்மை உலகம் மறந்ததே?

முன்பு குழந்தையைப் பேணும் மனம் படைத்தவர் அவரன்று; நான் தான். இதை மறந்து போனதே உலகம்?

மகவு பெற்றுத் தரும் சக்தியற்றவளாய் இருக்கிறேன் நான். 'மகவுக்கு உள்ள மகிமை' யை அவர் அறியுமாறு உணர்த்தியவள் நான் அல்லவா? இதை மறந்ததே உலகம்? மறக்காமல் என் செய்யும்? ஆம் - காதல் அன்பிலே அவர் கொண்டிருந்த ஆர்வம் - இன்று குழந்தை அன்பிலே வளைந்துவிட்டது.

'ராதா ஸமேதா கிருஷ்ணா,' என நான் பாடுவதை முன்பு ரசித்து வந்த கணவரே மாறிவிட்டாரே! 'அம்மா ஸமேதா அப்பா!' என்று பாடக் கூடிய ஒரு குழந்தையை, வீட்டிலே இல்லாததை, கற்பனை செய்து பார்க்கிறாரே!

முன்பு என் மனம் இருந்த உயர்நிலையை நானே மறந்து ஏங்கும் பொழுது - பிறர் மறந்தனரே என நான் ஏங்குவதே - தவறோ கடவுளே!

**********

(சுதேசமித்திரன், பிப்ரவரி 5, 1950)